Liberté • Égalité • Fraternité
RÉPUBLIQUE FRANÇAISE

OFPRA

**CONCOURS POUR LE RECRUTEMENT D'OFFICIERS DE PROTECTION DES REFUGIES ET APATRIDES AU TITRE DE L'ANNEE 2008**

SESSION DES 05 ET 06 MAI 2008

---

**EPREUVE ECRITE D'ADMISSIBILITE**
**Epreuve n°3**

*(au choix du candidat exprimé au moment de l'inscription)*

Epreuve écrite de langue vivante étrangère consistant en la réponse à une ou plusieurs questions de compréhension d'un texte. Les questions ainsi que les réponses sont rédigées dans la langue de l'épreuve.

# TAMOUL

**L'usage du dictionnaire est autorisé.**
**(à l'exclusion des dictionnaires électroniques)**

*(Durée : 2 heures - coefficient 2)*

## வறுமையும் முன்னேற்றமும்

(அ.சோ. பட்டேல், செய்தியாளர் – இந்தியா டுடே– ஆகஸ்ட் 2007)

பெரும்பாலான மக்கள் வாழும் கிராமப் பகுதிகளின் பொருளாதாரப் பின்தங்கிய நிலை அல்லது தேக்கநிலையே வளர்முக நாடுகளின் வறுமை நிலைக்கு முக்கிய காரணம் எனக் கருதப்படுகிறது. இந்தியாவில் இந்தக் கிராமப்பகுதி மக்களின் முக்கியத் தொழில் வேளாண்மையே. அங்கு நிகர உள்நாட்டு உற்பத்தியில் 40 சதவிகிதம் வேளாண்மைப் பொருள்களே. எனினும் வேளாண்மைத் தொழிலாளர்களின் வருமானம் தேசியச் சராசரிக்கு மிகக் குறைவாகவே இருக்கிறது. இதற்குக் காரணங்கள் பல. குறிப்பாக :

- நிலவுடைமைகள் கட்டுபடியாகாத அளவுகளில் இருத்தல்
- நீர்ப்பாசன வசதிகள் குறைபாடு. இதனால் விவசாயிகள் மழையையும் பருவ நிலை மாறுபாடுகளையும் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது.
- வேளாண்மை விளைபொருள்களைக் கொள்முதல் செய்யவும் மறு விற்பனை செய்யவும் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற சீரான நிருவாக அமைப்பின்மை.

சிறிய குடியானவர்களின் உற்பத்தித் திறன் மிகக் குறைவு. இதனால் உழைப்புக்கும் முதலீட்டுக்கும் மிகக் குறைந்த அளவு வருவாயே கிடைக்கிறது.

பொருளாதாரத் தேக்கநிலை பெரும்பாலும் புறக்காரணங்களால் ஏற்படுகிறது. அதனை, உரிய மேம்பாட்டுக் கொள்கைகளையும், செயல் திட்டங்களையும் உறுதியாகச் செயல் படுத்துவதன் மூலம் மாற்றி விடலாம். இந்திய சமுதாயத்தில் ஆழமாகப் பதிந்திருக்கும் சில சமூகவியல் காரணங்களாலும் தேக்கநிலை ஏற்படுகிறது. சாதி வேறுபாடுகளாலும் சமய நம்பிக்கைகளாலும் எழுகின்ற இந்தத் தடங்கல்களை நீக்கக் கல்விமுறை, செய்தித் தொடர்பு வாயிலாகப் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சாதிமுறையினால் கட்டிறுக்கமாக ஏற்படுத்தப்பட்டுள்ள படிநிலை முறையும், பண்டைக்கால முதலே ஒவ்வொரு சாதியினருக்கும் குறித்து அளிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட அலுவற்பணிகளும், சமயத் தடைக்கட்டுகளும் முன்னேற்றத்திற்குரிய வாய்ப்பினைக் குறைத்துவிடுகின்றன. கிராம மக்கள் பழைமைப் பற்றுடையவர்களாகவும் சமய மரபுகள், சமூகப் பழக்கவழக்கங்கள், மூட நம்பிக்கைகள் ஆகியவற்றில் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர்களாகவும் இருக்கிறார்கள். இவை பொருளாதார மேம்பாட்டுக்கும் விரைவான வறுமை ஒழிப்புக்கும் முட்டுக்கட்டை போடுகின்றன. மற்றொரு சமூக மரபு, சுரண்டல் ஆகும். இதுவும் வர்க்கபேதம், சாதிவேறுபாடு ஆகியவற்றால் நிறைந்ததாகும்....

**கேள்விகள்:**

1. இந்தியாவில் வேளாண்மைத் தொழிலாளர்களின் வருமானம் எந்த நிலையில் உள்ளது ? இங்கு தரப்பட்டுள்ள காரணங்களைத் தவிர வேறு காரணங்கள் உண்டா ? விளக்குக.
2. பொருளாதார மேம்பாட்டுக்கும் விரைவான வறுமை ஒழிப்புக்கும் முட்டுக்கட்டை போடுபவை எவை ? விவரிக்க.
3. சுரண்டல் என்பது வர்க்கபேதம், சாதி வேறுபாடு முதலியவற்றால் நிறைந்தது என்கிறார் கட்டுரை ஆசிரியர். அது எப்படி ? எடுத்துக்காட்டுகளோடு விவரிக்க.
4. இதனால் நாட்டிற்கும் மக்களுக்கும் ஏற்படும் விளைவுகள் யாவை ? விளக்குக.